**சுருக்கம்**

தாம்பரம் பெருநகராட்சி – விரிவாக்கம் – தாம்பரம் மாநகராட்சியை அமைத்துருவாக்கும் பொருட்டு, ஐந்து நகராட்சிகள் மற்றும் ஐந்து பேரூராட்சிகளை இணைத்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை**

**அரசாணை (நிலை) எண். 93** **நாள்: 01.11.2021**

**திருவள்ளுவர் ஆண்டு 2052**

**பிலவ, ஐப்பசி–15**

**படிக்கப்பட்டது:**

1. அரசாணை (நிலை) எண்.66, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 11.09.2021.
2. செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கடித ந.க.எண்.3621/2021/ப.ஆ.2, நாள்.25.10.2021.
3. நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடித ந.க.எண்.20779/2021/மா.ந.அ1, நாள் 26.10.2021
4. அரசு கடித எண்.19742/தேர்தல்/2021–5, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள் 01.11.2021.

******

**ஆணை :**

மேலே முதலாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், தாம்பரம் மாநகராட்சியாக அமைத்துருவாக்கும் பொருட்டு, தாம்பரம் நகராட்சியுடன் பல்லவபுரம், பம்மல், அனகாபுத்தூர், செம்பாக்கம் ஆகிய நான்கு நகராட்சிகள் மற்றும் சிட்லப்பாக்கம், மாடம்பாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கங்கரணை மற்றும் திருநீர்மலை ஆகிய ஐந்து பேரூராட்சிகளை இணைக்கலாம் என்ற அரசின் உத்தேச முடிவு குறித்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

**2.** இந்நிலையில், மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவரின் கடிதத்தில், தாம்பரம் நகராட்சி மற்றும் அதனைச்சுற்றி அமைந்துள்ள பல்லவபுரம், பம்மல், அனகாபுத்தூர், செம்பாக்கம் ஆகிய நான்கு நகராட்சிகள் மற்றும் சிட்லப்பாக்கம், மாடம்பாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கங்கரணை மற்றும் திருநீர்மலை ஆகிய ஐந்து பேரூராட்சிகளை ஒன்றிணைத்து தாம்பரம் மாநகராட்சியாக உறுதியாக்கம் செய்து அரசாணைப் பிறப்பிக்க, தொடர்புடைய உள்ளாட்சி அமைப்புகளிடமிருந்து பெறப்பட்ட தீர்மானங்களுடன் உரிய கருத்துரு பெறப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

3. மேலும், தாம்பரம் நகராட்சியுடன் மேற்குறிப்பிடப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளை இணைத்து தாம்பரம் மாநகராட்சியாகத் தரம் உயர்த்த வெளியிடப்பட்ட உத்தேச முடிவு குறித்த அரசாணைக்கு, பல்லவபுரம் தவிர்த்து தாம்பரம், பம்மல், செம்பாக்கம், அனகாபுத்தூர் ஆகிய நான்கு நகராட்சிகள் மற்றும் சிட்லப்பாக்கம், மாடம்பாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கங்கரணை மற்றும் திருநீர்மலை ஆகிய ஐந்து பேரூராட்சிகளில் பொதுமக்களிடமிருந்து ஆட்சேபணைகள் ஏதும் பெறப்படவில்லை என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார்.

4. மேலும் பல்லவபுரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட சில சங்கங்கள் சார்பாக, பல்லவபுரம் நகராட்சியை சென்னை மாநகராட்சியுடன் இணைக்க வேண்டும் என கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது எனவும், எனினும், பல்லவபுரம் நகராட்சியை, பெருநகர சென்னை மாநகராட்சியுடன் இணைப்பதை விட தாம்பரம் நகராட்சியுடன் இணைப்பதால் நிர்வாக ரீதியாக ஏதுவாகவும், பொதுமக்கள் தலைமை அலுவலகம் சென்று வருவதில் எளிதாகவும் இருக்கும் என்பதாலும், மனுதாரர்களின் கோரிக்கையை நிராகரித்து, பல்லவபுரம் நகராட்சியை தாம்பரம் மாநகராட்சியுடன் இணைக்கலாம் என பல்லவபுரம் நகராட்சியால் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளதாக செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். பல்லவபுரம் நகராட்சி, செங்கல்பட்டு மாவட்டத்திற்கு உட்பட்டது எனவும், இதனை சென்னை மாநகராட்சியுடன் இணைப்பது நிர்வாக ரீதியாக சிக்கலாக இருக்கும் எனவும், பல்லவபுரம் நகராட்சியை, தாம்பரம் நகராட்சியுடன் இணைப்பதால் நிர்வாக ரீதியாகவும் பொதுமக்கள் தங்கள் சேவையை பெறுவது தொடர்பாக உரிய உள்ளாட்சி அலுவலகத்தை எளிதாக அணுகுவதற்கு தலைமை அலுவலகம் மற்றும் மண்டல அலுவலகம் ஆகியன மிக அருகில் இருக்கும் என்பதாலும் பல்லவபுரம் நகராட்சியை தாம்பரம் நகராட்சியுடன் இணைத்து மாநகராட்சியாக அறிவிப்பதே பொருத்தமாக இருக்கும் எனவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார்.

5. 2010-11ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சியுடன் 42 உள்ளாட்சி அமைப்புகள் இணைக்கப்பட்டு எல்லை விரிவாக்கம் செய்யப்பட்டதன் காரணமாக சென்னை மாநகராட்சியானது 426 சதுர கி.மீ. பரப்பளவுடன் அமைந்துள்ளது. எனினும், இவ்வுள்ளாட்சி அமைப்புகள் சென்னை மாநகராட்சியுடன் இணைக்கப்பட்டதன் நோக்கங்கள் முழுமையாக நிறைவேற்றப்படவில்லை. இணைக்கப்பட்ட இப்பகுதிகளில் உட்கட்டமைப்புகளுக்கான தேவைகள் தற்போதும் அதிக அளவில் உள்ள நிலையில், அவற்றை நிறைவேற்றுவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறது. இந்நிலையில், சென்னை மாநகராட்சியுடன் மேலும் உள்ளாட்சி அமைப்புகளை இணைப்பது, அவ்விணைப்பின் நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் அமையாது. எனவே, புதிய மாநகராட்சியை உருவாக்குவது என முடிவு செய்யப்பட்டுள்ளது.

6. நகராட்சி நிர்வாக இயக்குநரது மேலே மூன்றாவதாக படிக்கப்பட்ட செயற்குறிப்பில், மேற்குறிப்பிடப்பட்ட தீர்மானங்கள் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியரின் பரிந்துரைக்கேற்ப, தாம்பரம், பல்லவபுரம், பம்மல், செம்பாக்கம், அனகாபுத்தூர் ஆகிய ஐந்து நகராட்சிகள் மற்றும் சிட்லப்பாக்கம், மாடம்பாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கங்கரணை மற்றும் திருநீர்மலை ஆகிய ஐந்து பேரூராட்சிகளை ஒன்றிணைத்து தாம்பரம் மாநகராட்சியாக உறுதியாக்கம் செய்து அரசாணை பிறப்பிக்க அரசிற்கு பரிந்துரை செய்து மேலனுப்பி வைத்துள்ளார்.

7. மேலும், அரசின் உத்தேச முடிவு தொடர்பாக அரசில் பெறப்பட்ட மனுக்கள் மீதான உரிய பரிசீலனைக்குப் பின்னர் அவற்றை மேலே நான்காவதாக படிக்கப்பட்ட அரசுக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள தக்கக் காரணங்களின் அடிப்படையில் நிராகரிக்கப்பட்டு மனுதாரர்களுக்கு தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. தாம்பரம் நகராட்சி, அதனருகில் அமைந்துள்ள பல்லவபுரம், பம்மல், அனகாபுத்தூர், செம்பாக்கம், சிட்லப்பாக்கம், மாடம்பாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கங்கரணை. திருநீர்மலை ஆகிய உள்ளாட்சி அமைப்புகள் மிக வேகமாக நகரமயமாகி வருவதன் காரணமாகவும், மக்கள் தொகை அதிகரித்து வருவதன் காரணமாகவும், பொதுமக்களின் நலன் கருதி அப்பகுதிகளில், மேலும் தரமான சாலைகள், குடிநீர், தெருவிளக்குகள், கழிவுநீர் அகற்றுதல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை ஆகிய அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளை மிகப்பெரிய அளவில் திட்டமிட்டு ஏற்படுத்த வேண்டியது அவசியமாகிறது. எனவே, மேற்குறிப்பிடப்பட்ட நகரப்பகுதிகளை இணைத்து மாநகராட்சியாக உருவாக்கினால், உத்தேச புதிய மாநகராட்சியில், திட்டமிட்ட, சிறப்பான அடிப்படை உட்கட்டமைப்பு வசதிகளையும், மேம்படுத்தப்பட்ட சேவைகளையும் வழங்குவது எளிதாகும். மேலும், இந்த புதிய மாநகராட்சி உருவானால், இப்பகுதியின் மொத்த வளங்களையும் ஒன்றிணைத்து சிறந்த வசதிகளை மக்களுக்கு வழங்கிட இயலும்.

9. இந்நிலையில், அரசு, இச்செயற்குறிப்பின் மீதான கவனமான பரிசீலனைக்குப் பின்னர் நகராட்சி நிர்வாக இயக்குநரின் பரிந்துரையை ஏற்று, தாம்பரம் மாநகராட்சியை அமைத்துருவாக்கும் பொருட்டு, தாம்பரம் நகராட்சியுடன் அதனை சுற்றி அமைந்துள்ள பல்லவபுரம், பம்மல், செம்பாக்கம், அனகாபுத்தூர் ஆகிய நான்கு நகராட்சிகள் மற்றும் சிட்லப்பாக்கம், மாடம்பாக்கம், பெருங்களத்தூர், பீர்க்கங்கரணை மற்றும் திருநீர்மலை ஆகிய ஐந்து பேரூராட்சிகளை இணைக்கலாம் என்ற உத்தேச முடிவினை உறுதி செய்து அவ்வாறே ஆணையிடுகிறது. இவ்வுறுதியாக்கம் குறித்து, 1920–ஆம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டத்தின் பிரிவு 4(3)–ன் கீழ் அறிவிக்கை

வெளியிடப்படும். இவ்வாணையுடன் இணைக்கப்பட்டவாறான அறிவிக்கைகள் (ஆங்கிலத்தில்), 01.11.2021–ஆம் தேதியிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பிதழில் வெளியிடப்படும்.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**சிவ் தாஸ் மீனா**
**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**

**பெறுநர்:–**

பணி மேலாளர், அரசு மைய அச்சகம், சென்னை–01 (இவ்வரசாணையுடன் இணைக்கப்பட்ட அறிவிக்கைகளை தமிழ்நாடு அரசின் சிறப்பிதழில் வெளியிடவும் மற்றும் அதன் 50 பிரதிகளை அரசுக்கு அனுப்பி வைக்கவும்)
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை–28.
பேரூராட்சிகளின் ஆணையர், சென்னை–28.
செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர்.
தொடர்புடைய நகராட்சி ஆணையர்கள் (நகராட்சி இயக்குநர் வழியாக)
தொடர்புடைய பேரூராட்சி செயல் அலுவலர்கள்,
(பேரூராட்சிகளின் ஆணையர் வழியாக)

**நகல்:–**

மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை–09.
மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–09.
சட்டத்துறை, தலைமைச் செயலகம், சென்னை–9.
செயலாளர், தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம், அரும்பாக்கம், சென்னை–106.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.5, ந.ப.1 பேரூ.1, 2 மற்றும் அ.ந.2) துறை, சென்னை–09.

**//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்.**

# APPENDIX.

## NOTIFICATION.

In exercise of the powers conferred by sub-section (3) of section 4 of the Tamil Nadu District Municipalities Act, 1920 (Tamil Nadu Act V of 1920), the Governor of Tamil Nadu hereby includes the entire areas comprised in the following local authorities within the jurisdiction of Tambaram Municipality, the draft of the same having been previously published, as required under sub-section (1) of the said section 4 and after considering the objections received thereon:—

| Sl.No. | Names of the local authorities |
|---|---|
| (1) | Pallavapuram Municipality |
| (2) | Pammal Municipality |
| (3) | Sembakkam Municipality |
| (4) | Anakaputhur Municipality |
| (5) | Chitlapakkam Town Panchayat |
| (6) | Madambakkam Town Panchayat |
| (7) | Perungaluthur Town Panchayat |
| (8) | Peerkankaranai Town Panchayat |
| (9) | Tiruneermalai Town Panchayat |

Based on the above inclusion, wards will be divided for the next ordinary election.

**SHIV DAS MEENA**
**ADDITIONAL CHIEF SECRETARY TO GOVERNMENT**

**//True Copy//**

11/21

**Section Officer.**